யோவேல் - முன்னுரை

காலமும் இடமும்

யோவேலின் புஸ்தகம் கி.மு. 795-755 ஆவது வருஷத்தில் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

யோவேல் தீர்க்கதரிசி. (யோவே 1:1, யோவே 2:28-32=அப் 2:11-21)

மையக்கருத்து

1. இஸ்ரவேல் தேசம் பாபிலோன் தேசத்தினால் உடனடியாக அழிவதும், பிற்காலத்தில் அழிவதும்.
2. வருங்கால அந்திக்கிறிஸ்து
3. அர்மெகதோன் யுத்தம்.
4. கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் தேசத்தார் கூட்டிச் சேர்க்கப்படுவது.

யோவேல், ஏசாயா, எசேக்கியேல், சகரியா ஆகியோர் மாம்சமான யாவர்மேலும் வருங்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப் படுவதைப் பற்றி முன்னறிவித்திருக்கிறார்கள். (யோவே 2:28-32; ஏசா 32:15; ஏசா 44:3; எசே 36:26-27; எசே 37:14; எசே 39:29; சக 12:10-13:1).

யோவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டதற்கான நோக்கம் வருமாறு:

1. இஸ்ரவேலின் பின்மாற்றத்தின் நிமித்தமாக அவர்கள் பாடுகளை அனுபவிக்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெளிவு படுத்துவதற்காக.
2. கர்த்தரிடத்தில் மனந்திருந்தி வந்தால், கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால், தேவனுடைய ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலுக்குக் கிடைக்கும் என்பதை உறுதி பண்ணுவதற்காக.
3. வருங்கால ஆசீர்வாதங்களை அறிவிப்பதற்காக.
4. மேசியாவின்கீழ் இஸ்ரவேல் புத்திரர் நித்தியமாக கூட்டிச் சேர்க்கப் படுவதை மறுபடியும் அறிவிப்பதற்காக.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 3

வசனங்கள் - 73

கேள்விகள் - 7

தீர்க்கதரிசனப் பிரிவுகள் - 5

கட்டளைகள் - 50

வாக்குத்தத்தங்கள் - 10

யோவேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்தி. (யோவே 1:2-3:21)

பொருளடக்கம்

I. பாபிலோனினால் யூதாவின் உடனடி அழிவு

1. தலைப்பு, ஆசிரியர், கேட்பதற்கு அழைப்பு (1:1-3)
2. அழிப்பவர்கள் - அடையாளம் (1:4)
3. விழிக்குமாறு அழைப்பு - யூதாவின்மீது பாபிலோனிய படையெடுப்பு (1:5-7)
4. புலம்பல் - காரணம் (1:8-10)
5. அலறுதல் - காரணம் (1:11-12)
6. அலறுதலும் புலம்பலும் - காரணம் (1:13-14)

II. கர்த்தருடைய நாள்

1. கர்த்தருடைய நாளில் அழிவு (1:15-20)
2. எச்சரிப்பின் சத்தமிட அழைப்பு (2:1)
3. அர்மகெதோனில் தேவனுடைய தெய்வீக சேனைகள் (2:2-11)

யோவேல் - முன்னுரை

III. இஸ்ரவேலின் வருங்கால மீட்பு

1 மனந்திரும்புவதற்கு அழைப்பு *(2:12-17)*

2. அப்பொழுது - ஆறு அம்ச மீட்பு *(2:18-19)*

3. அப்பொழுது - விரோதிகளின் அழிவு *(2:20)*

4. அப்பொழுது - தேசம், ஜனம் ஆகியவற்றின் பதினான்கு அம்ச மீட்பு *(2:21-27)*

5. அதற்குப்பின்பு எல்லா ஜனங்களுடைய ஐந்து அம்ச ஆவிக்குரிய மீட்பு *(2:28-29)*

6. கர்த்தருடைய நாளும் மேசியாவின் இரண்டாம் வருகைக்கு முந்திய அடையாளங்களும் *(2:30-32)*

IV. அர்மகெதோன் யுத்தம்

1. யூதாவும் எருசலேமும் மீட்கப்பட்டன *(3:1)*

2. சகல ஜாதியாரையும் கூட்டுதல் *(3:2)*

3. தேசங்கள்மீது நியாயத்தீர்ப்பிற்கான காரணங்கள் *(3:3-8)*

4. ஜனங்களைக் கூட்டுமாறும் யுத்தம் பண்ணுமாறும் கூறுவதன் பத்து அம்சங்கள் *(3:9-12)*

5. அந்திக்கிறிஸ்துவின் சேனையினுடைய பத்து அம்ச அழிவு *(3:13-16)*

V. அர்மகெதோன் யுத்தத்திற்குப் பின்பு இஸ்ரவேலின் வருங்கால மீட்பு

1. கர்த்தர் சீயோனில் ஆளுகை செய்கிறார் *(3:17)*

2. இஸ்ரவேலின் பௌதீக ஆசீர்வாதங்கள் *(3:18)*

3. இஸ்ரவேல் தன் விரோதிகள்மீது பழிதீர்த்தது *(3:19)*

4. நித்திய ஜனமான யூதா *(3:20-21)*

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. பாபிலோனினால் யூதாவின் உடனடி அழிவு - (1:1-14)

1. தலைப்பு, ஆசிரியர், கேட்பதற்கு அழைப்பு

யோவே 1:1 பெத்துவேலின் குமாரனாகிய யோவேலுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

யோவே 1:2 முதியோரே, இதைக் கேளுங்கள்; தேசத்தின் சகல குடிகளே, செவிகொடுங்கள்; உங்கள் நாட்களிலாவது உங்கள் பிதாக்களின் நாட்களிலாவது இப்படிப்பட்டது சம்பவித்ததுண்டா?

யோவே 1:3 இதின் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவியுங்கள்; இதை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் சந்ததியாருக்கும் தெரிவிக்கக்கடவர்கள்.

'பெத்துவேலின் குமாரனாகிய யோவேல்" - யோவேல் தீர்க்கதரிசி இந்த வசனத்தில் மட்டுமே தன்னைப் பற்றியும், தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்தின் அழைப்பைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவர் யூதா தேசத்திற்குத் தீர்க்கதரிசனம் கூறினார். கர்த்தருடைய வசனம் தன் மூலமாக வருவதாக யோவேல் உறுதிபண்ணுகிறார்.

யோவேல் தீர்க்கதரிசன புஸ்தகம் முழுவதிலும் ஒரே ஒரு தீர்க்கதரிசனமே கூறப்பட்டிருக்கிறது. மற்ற தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களில் கூறப்பட்டிருப்பதுபோல இதில் அநேக தீர்க்கதரிசனங்கள் கூறப்படவில்லை. ஆயினும் யோவேல் கூறிய தீர்க்கதரிசனத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். ஓசியாவைப் போல யோவேலும் தன்னுடைய தகப்பனுடைய பெயரைக் குறிப்பிடுகிறார். யோவேலின் குடும்பப் பின்னணியைப் பற்றி இது மட்டுமே இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

யோவேலின் தீர்க்கதரிசனமும், ஏசாயா, ஆமோஸ் ஆகியோருடைய தீர்க்கதரிசனமும் பல இடங்களில் ஒன்றுபோல் உள்ளன. இதனால் யோவேல் அவர்களுடைய தீர்க்கதரிசனங்களைப் பிரதியெடுத்துக் கொண்டார் என்று கூறமுடியாது. ஏசாயாவையும், ஆமோசையும் ஏவின அதே பரிசுத்த ஆவியானவரே யோவேலையும் ஏவி, இந்தத் தீர்க்கதரிசனத்தை அறிவிக்குமாறு வழிநடத்தியிருக்கிறார். (யோவே 3:16= ஆமோ 1:2, யோவே 1:15= ஏசா 13:6)

"யோவேல்" (Joel) - இந்தப் பெயருக்குக் "கர்த்தர் தேவனாயிருக்கிறார்" the Lord is God என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "யோவேல்"கள்

1. சாமுவேலின் குமாரன். (1சாமு 8:21; 1நாளா 6:33; 1நாளா 15:17) மறுபெயர் வஷ்னீ (Vashni) (1நாளா 6:28)
2. சிமியோனியரின் பிரபு (1நாளா 4:35)
3. ரூபன் கோத்திரத்தான் (1நாளா 5:4,8)
4. காத் புத்திரரின் தலைவன் (1நாளா 5:12)
5. சாமுவேலின் முன்னோர்களில் ஒருவன் (1நாளா 6:36)
6. இசக்கார் கோத்திரத்தில் ஒரு தலைவன் (1நாளா 7:3)
7. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1நாளா 11:38)
8. ஒரு லேவியன் (1நாளா 15:7,11; 1நாளா 23:8)
9. மற்றொரு லேவியன் (1நாளா 26:22)
10. மனாசே கோத்திரத்திலுள்ள ஒரு பிரபு (1நாளா 27:20)
11. கோகாத்தியன் (2நாளா 29:12)
12. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவன். (எஸ்றா 10:43)
13. பென்யமீன் கோத்திரத்தான். (நெகே 11:9)

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

14. ராஜாக்களின் காலத்தில் இருந்த தீர்க்கதரிசி (யோவே 1:1)

"முதியோரே" - அக்காலத்தில் முதியோர் மூலமாக வரலாற்றுச் செய்திகள் ஒவ்வொரு வம்சத்திற்கும் வாய்மொழியாக அறிவிக்கப் பட்டது. ஆகையினால் யோவேல் இந்தத் தீர்க்கதரிசனத்தை முதியோரிடம் கூறுகிறார். தேவனிடமிருந்து முதியோர் தீர்க்கதரிசனச் செய்தியைத் தெளிவாகக் கேட்டுக் கொண்டால், அவர்கள் அதை அடுத்த சந்ததிகளுக்கு முறைப்படி அறிவிப்பார்கள். (யோவே 1:2-3).

'தேசத்தின் சகல குடிகளே, செவிகொடுங்கள்" - முதியோருக்கு மட்டும் என்றல்லாமல் யோவேல் சகல குடிகளுக்கும் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார். அவர்களைப் பற்றிய காரியங்களையும், அவர்களுடைய சந்ததியாருக்கு இனிமேல் வரப்போகும் காரியங்களைப் பற்றியும் யோவேல் தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். தங்கள் முற்பிதாக்கள் மூலமாக இதுவரையிலும் கேள்விப்பட்டிராத முக்கியமான காரியங்களை யோவேல் சகல ஜனங்களுக்கும் அறிவிக்கிறார்.

யோவேலில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. முதியோரே, இதைக் கேளுங்கள் (யோவே 1:2).

2. தேசத்தின் சகல குடிகளே, செவிகொடுங்கள்.

3. இதின் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவியுங்கள் (யோவே 1:3).

4. இதை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் சந்ததியாருக்கும் தெரிவிக்கக்கடவர்கள்.

5. வெறியரே, விழித்து அழுங்கள் (யோவே 1:5).

6. திராட்சரசம் குடிக்கிற சகல ஜனங்களே அலறுங்கள்.

7. தன் பாலியவயதின் புருஷனுக்காக இரட்டுடுத்தியிருக்கிற பெண்ணைப் போலப் புலம்பு. (யோவே 1:8).

8. பயிரிடுங் குடிகளே, வெட்கப்படுங்கள் (யோவே 1:11).

9. திராட்சத்தோட்டக்காரரே, அலறுங்கள்.

10. ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள் (யோவே 1:13).

11. பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, அலறுங்கள்;

12. என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள் (யோவே 1:13).

13. பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள் (யோவே 1:14).

14. விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.

15. மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச் செய்யுங்கள்.

16. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

17. சீயோனிலே எக்காளம் ஊதுங்கள் (யோவே 2:1).

18. என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்.

19. தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்.

20. உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் (யோவே 2:12).

21. நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழியுங்கள். (யோவே 2:13).

22. உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்.

23. சீயோனிலே எக்காளம் ஊதுங்கள் (யோவே 2:15).

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

24. பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்.

25. விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.

26. ஜனத்தைக் கூட்டுங்கள். (யோவே 2:16).

27. சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்.

28. முதியோரைச் சேருங்கள்.

29. பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்.

30. மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக.

31. கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலி பீடத்துக்கும் நடுவே அழுவார்களாக. (யோவே 2:17).

32. கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும் என்று சொல்வார்களாக.

33. தேசமே, பயப்படாதே (யோவே 2:21).

34. மகிழ்ந்துகளிகூரு.

35. வெளியின் மிருகங்களே, பயப்படாதேயுங்கள் (யோவே 2:22).

36. சீயோன் குமாரரே, மகிழ்ந்து களிகூருங்கள். (யோவே 2:23).

37. உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்.

38. இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள் (யோவே 3:9).

39. யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்.

40. பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்.

41. யுத்தவீரர் எல்லாரும் சேரக் கடவர்கள்.

42. அவர்கள் ஏறிவரக்கடவர்கள்.

43. உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள் (யோவே 3:10).

44. பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக.

45. சகல ஜாதிகளே, நீங்கள் வந்து கூடுங்கள். (யோவே 3:11).

46. நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்.

47. உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப்பண்ணுவீராக.

48. ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; (யோவே 3:12).

49. அரிவாளை நீட்டி அறுங்கள் (யோவே 3:13).

50. வந்து இறங்குங்கள்.

2. அழிப்பவர்கள் - அடையாளம்

யோவே 1:4 பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப் பூச்சி தின்றது.

தீர்க்கதரிசனப் பிரிவு எண் - 1

"பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது...." (யோவே 1:4-14) இந்தத் தீர்க்கதரிசனப்பிரிவு நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. உங்கள் பயிர்களை வெட்டுக்கிளி தின்னும். (யோவே 1:4).
2. பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்னும்.
3. வெட்டுக்கிளி விட்டதைப் பச்சை கிளி தின்னும்.
4. பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப் பூச்சி தின்னும்.

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

5. புதுதிராட்சரசம் விலக்கப்படும். (யோவே 1:5).

6. எண்ணிமுடியாத ஒரு பலத்த ஜாதி என் தேசத்தின்மேல் வரும். (யோவே 1:6).

7. அது என் திராட்சச்செடியை அழிக்கும். (யோவே 1:7).

8. அது என் அத்திமரத்தை உரிக்கும்.

9. அதின் பட்டையை தின்றுபோடும்.

10. அதை முற்றிலும் அழிக்கும்.

11. அதின் கிளைகள் வெண்மையாகும்.

12. போஜனபலியும் பானபலியும் கர்த்தருடைய ஆலயத்தை விட்டு அகன்றுப்போகும். (யோவே 1:9,13).

13. கர்த்தரின் ஊழியக்காரராகிய ஆசாரியர்கள் துக்கிப்பார்கள். (யோவே 1:9).

14. வயல்வெளி பாழாகும். (யோவே 1:10).

15. பூமி துக்கங்கொண்டாடும்.

16. விளைச்சல் அழிக்கப்படும்.

17. புது திராட்சரசம் வற்றிப்போகும்.

18. எண்ணெய் மாண்டுபோகும்.

19. திராட்சச்செடி வதங்கும். (யோவே 1:12).

20. அத்திமரம் சாரமற்றுப்போகும்.

21. மாதளை, பேரீச்சம், கிச்சிலி முதலிய வெளியின் செடிகள் எல்லாம் வாடிப்போகும்.

22. சந்தோஷம் மனுபுத்திரரைவிட்டு ஒழிந்துபோகும்.

வெட்டுக்கிளியின் நான்கு நிலைகள்

1. பச்சைப்புழு
2. வெட்டுக்கிளி
3. பச்சைக்கிளி
4. முசுக்கட்டைப்பூச்சி

பச்சைப்புழு (Palmerworm) - גָּזָם - gaw-zawm' - 1501

ஆ.பெ.சொ.- முசுக்கட்டைப் பூச்சி, பச்சைப் புழு (the gnawer)

வெட்டுக்கிளி (Locust) - אַרְבֶּה - ar-beh' - 697

ஆ.பெ.சொ.-வெட்டுக்கிளி(the warmer)

பச்சைக்கிளி (Cankerworm) - יֶלֶק - yeh'-lek - 3218

பெ.சொ.-புழு,வெட்டுக்கிளி,பச்சைப்புழு (the devourer)

முசுக்கட்டைப்பூச்சி (Caterpillar) - חָסִיל - khaw-seel' - 2625

ஆ.பெ.சொ.-வெட்டுக்கிளி the consumer

"பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது" - பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவையும், எருசலேமையும் முழுவதுமாக அழிப்பான். (யோவே 1:4-14) கர்த்தருடைய நாளில் பாலஸ்தீன தேசம் முழுவதுமாக அழிக்கப்படும் என்பதற்கு நேபுகாத்நேச்சார் மூலமாக உண்டான அழிவு ஒரு முன்னடையாளமாகும். (யோவே 1:15-3:21).

3. விழிக்குமாறு அழைப்பு - யூதாவின் மீது பாபிலோனிய படையெடுப்பு

யோவே 1:5 வெறியரே, விழித்து அழுங்கள்; திராட்சரசம் குடிக்கிற சகல ஜனங்களே, புது திராட்சரசத்தினிமித்தம் அலறுங்கள்; அது உங்கள் வாயினின்று விலக்கப்பட்டது.

யோவே 1:6 எண்ணிமுடியாத ஒரு பலத்த ஜாதி என் தேசத்தின்மேல் வருகிறது; அதின் பற்கள் சிங்கத்தின் பற்கள்; துஷ்ட சிங்கத்தின் கடைவாய்ப்பற்கள் அதற்கு உண்டு.

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

"எண்ணிமுடியாத ஒரு பலத்த ஜாதி என் தேசத்தின்மேல் வருகிறது" - கர்த்தருடைய நாளில் யூதா தேசத்தின்மீது வருங்காலத்து அந்திக்கிறிஸ்து சீரியாவிலிருந்தும், பாபிலோனிலிருந்தும் வருவான். (எசே 38-39; தானி 11:41-45; 2தெச 2:3-4; வெளி 16:13-16; வெளி 19:11-21). அந்நாளில் அந்திக்கிறிஸ்துவின் சேனை "வடதிசை சேனை" "the northern army" என்று அழைக்கப்படும். (யோவே 2:20).

4. புலம்பல் - காரணம்

யோவே 1:8 தன் பாலியவயதின் புருஷனுக்காக இரட்டுடுத்தியிருக்கிற பெண்ணைப்போலப் புலம்பு.

யோவே 1:9 போஜனபலியும் பானபலியும் கர்த்தருடைய ஆலயத்தை விட்டு அற்றுப் போயின; கர்த்தரின் ஊழியக்காரராகிய ஆசாரியர்கள் துக்கிக்கிறார்கள்.

யோவே 1:10 வயல்வெளி பாழாயிற்று, பூமி துக்கங்கொண்டாடுகிறது; விளைச்சல் அழிக்கப்பட்டது; புது திராட்சரசம் வற்றிப்போயிற்று; எண்ணெய் மாண்டுபோயிற்று.

5. அலறுதல் - காரணம்

யோவே 1:11 பயிரிடுங் குடிகளே, வெட்கப்படுங்கள்; கோதுமையும் வாற்கோதுமையும் இல்லாமற் போயிற்று; திராட்சத்தோட்டக்காரரே, அலறுங்கள்; வயல்வெளியின் அறுப்பு அழிந்துபோயிற்று.

யோவே 1:12 திராட்சச்செடி வதங்கி, அத்திமரம் சாரமற்றுப்போகிறது; மாதளை, பேரீச்சம், கிச்சிலி முதலிய வெளியின் செடிகள் எல்லாம் வாடிப்போயின; சந்தோஷம் மனுபுத்திரரைவிட்டு ஒழிந்துபோயிற்று.

6. அலறுதலும் புலம்பலும் - காரணம்

யோவே 1:13 ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள்; பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, அலறுங்கள்; என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள். உங்கள் தேவனுடைய ஆலயத்தில் போஜனபலியும் பானபலியும் செலுத்தப்படாமல் நிறுத்தப்பட்டது.

யோவே 1:14 பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக்குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

பரிசுத்தப்படுத்துதல்கள்

1. விசேஷித்த ஆசரிப்பைக் கூறுதல் (யோவே 1:14).
2. பரிசுத்த உபவாசநாளை நியமித்தல். (யோவே 2:15).
3. சபையைப் பரிசுத்தப்படுத்துதல். (யோவே 2:16).

"விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்" - ஒரு முக்கியமான சம்பவத்திற்காக ஜனங்களைக் கூட்டுவது. இந்தக் கூட்டம் மார்க்க ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ கூட்டப்படலாம். (யோவே 2:15; 2இராஜா 10:20; 2நாளா 7:9; நெகே 8:18; ஏசா 1:13).

II. கர்த்தருடைய நாள் - (ஏசா 2:10)

1. கர்த்தருடைய நாளில் அழிவு

யோவே 1:15 அந்த நாளினிமித்தம் ஐயோ! கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது; அது சங்காரம்போல சர்வவல்லவரிடத்திலிருந்து வருகிறது.

யோவே 1:16 நம்முடைய கண்களைவிட்டு ஆகாரமும், நம்முடைய தேவனின் ஆலயத்தைவிட்டுச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நீக்கப்படவில்லையோ?

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

யோவே 1:17 விதையானது மண்கட்டிகளின் கீழ் மக்கிப் போயிற்று; பயிர் தீய்ந்து போகிறதினால் பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்துபோயின.

யோவே 1:18 மிருகங்கள் எவ்வளவாய்த் தவிக்கிறது; மாட்டுமந்தைகள் தங்களுக்கு மேய்ச்சல் இல்லாததினால் கலங்குகிறது; ஆட்டுமந்தைகளும் சேதமாய்ப்போயிற்று.

யோவே 1:19 கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்து, ஜுவாலை வெளியின் விருட்சங்களையெல்லாம் எரித்துப்போடுகிறது.

யோவே 1:20 வெளியின் மிருகங்களும் உம்மைநோக்கிக் கதறுகிறது; நதிகளில் தண்ணீரெல்லாம் வற்றிப்போயிற்று. அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போட்டது.

"கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது" - இந்தத் தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய நாளைப் பற்றி ஐந்து இடங்களில் கூறப் பட்டிருக்கிறது. வருங்காலத்தில் இவை அந்நாளில் நிறைவேறும். (யோவே 1:15; யோவே 2:1,11,31; யோவே 3:14).

தீர்க்கதரிசனப் பிரிவு எண் - 2

"அந்த நாளினிமித்தம் ஐயோ! கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது......" (யோவே 1:15-2:11) இந்தத் தீர்க்கதரிசனப் பிரிவு இன்னும் நிறைவேறவில்லை. கர்த்தருடைய நாளில் அர்மெகதோன் யுத்தத்திலும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும் இது நிறைவேறும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது (யோவே 1:15).
2. அது சங்காரம்போல சர்வ வல்லவரிடத்திலிருந்து வருகிறது.
3. தேவனின் ஆலயத்தைவிட்டுச் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நீக்கப்படும். (யோவே 1:16).
4. விளைச்சல் இருக்காது (யோவே 1:17).
5. விதையானது மண்கட்டிகளின் கீழ் மக்கிப்போகும்.
6. பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்துபோகும்.
7. பெரிய வறட்சி உண்டாகும். (யோவே 1:18)
8. அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்து, ஜுவாலை வெளியின் விருட்சங்களையெல்லாம் எரித்துப்போடும். (யோவே 1:19).
9. நதிகளில் தண்ணீரெல்லாம் வற்றிப் போகும். வெளியின் மிருகங்களும் உம்மைநோக்கிக் கதறும். (யோவே 1:20).
10. அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போடும்.
11. கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது. (யோவே 2:1).
12. அது இருளும் அந்தகாரமுமான நாள் (யோவே 2:2)
13. அது மப்பும் மந்தாரமுமான நாள்.
14. ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்.
15. அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை. இனித்தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டவாதுமில்லை.
16. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும் (யோவே 2:3).
17. அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும்.
18. அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப்போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப் போலவும் இருக்கும்.

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

19. அவைகளுக்கு ஒன்றும் தப்பிப் போவதில்லை.

20. அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது; அவைகள் குதிரை வீரரைப்போல ஓடும். (யோவே 2:4).

21. அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல்போல இருக்கும். (யோவே 2:5).

22. செத்தைகளை எரிக்கிற அக்கினி ஜுவாலையின் இரைச்சல்போல இருக்கும்.

23. யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல்போல இருக்கும்.

24. அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள் (யோவே 2:6)

25. எல்லா முகங்களும் கருகிப்போகும்.

26. அவைகள் பராக்கிரசாலி களைப்போல ஓடும். (யோவே 2:7)

27. யுத்தவீரரைப்போல மதிலேறும்.

28. அவைகள் வரிசைகள் பிசகாமல் செல்லும்.

29. ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும்.

30. அவை ஒன்றை ஒன்று நெருக்காது (யோவே 2:8).

31. ஒவ்வொன்றும் தன்தன் பாதையிலே செல்லும்.

32. அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற்போகும்.

33. அவைகள் பட்டணம் எங்கும் செல்லும் (யோவே 2:9).

34. மதிலின்மேல் ஓடும்.

35. வீடுகளின்மேல் ஏறும்.

36. பலகணிவழியாய்த் திருடனைப்போல உள்ளே நுழையும்.

37. அவைகளுக்கு முன்பாகப் பூமி அதிரும் (யோவே 2:10).

38. வானங்கள் அசையும்.

39. சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்.

40. நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்.

41. கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார் (யோவே 2:11).

42. அவருடைய பாளயம் மகா பெரிது.

43. அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது.

44. கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்.

கர்த்தருடைய நாளின் சாபங்கள்

1. அது சங்காரம்போல சர்வ வல்லவரிடத்திலிருந்து வருகிறது. (யோவே 1:15).

2. அது இருளும் அந்தகாரமுமான நாள் (யோவே 2:2).

3. அது மப்பும் மந்தாரமுமான நாள்.

4. கர்த்தருடைய சேனை வானத்திலிருந்து வந்து பூமியைப் பட்சிக்கும் நாள். (யோவே 2:2-11).

5. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும் நாள். (யோவே 2:3).

6. அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்கும் நாள். (யோவே 2:6).

7. திரளான ஜனங்களை அழிப்பதற்காக பூமியின்மீது பரலோகத்தின் சேனைகளும், ஆகயாத்து மண்டலங்களில் உள்ளவைகளும் தோன்றும் நாள். (யோவே 2:4-11; யோவே 3:14).

8. கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும். (யோவே 2:11,31).

9. அந்த நாளுக்குப் பின்பு கர்த்தர் மாம்சமான யாவர்மேலும் தம் ஆவியை ஊற்றுவார். (யோவே 2:28-32).

யோவேல் - தொகுப்புரை

1 அதிகாரம்

10. எருசலேமிற்கு விரோதமாகக் கூடிவருகிற எல்லா தேசத்தாரும் அந்நாளில் அழிக்கப் படுவார்கள். (யோவே 3:2-16; சக 14:1-5, 14-15; 2தெச 1:7-10; வெளி 19:11-21).

11. யுத்தமும், அழிவும் உண்டாகும் நாள். (யோவே 2:1; யோவே 3:9-16).

12. தேசங்களின்மீது நியாயத்தீர்ப்பு வரும் நாள். (யோவே 3:11-12; மத் 25:31-46).

13. பூமியை நித்தியமாக ஆளுகை செய்கிறவர் யாரென்பதைத் தீர்மானம் பண்ணுகிற நாள். (யோவே 3:14-16; வெளி 11:15; வெளி 10:11-21; வெளி 20:1-10).

14. சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் இருண்டுபோகும் நாள்.(யோவே 3:15; மத் 24:29-31).

15. பெரிய பூமியதிர்ச்சிகள் உண்டாகும் நாள். (யோவே 1:16; சக 14:4-5; வெளி 16:17-21).

"களஞ்சியங்கள் இடிந்துபோயின." - கர்த்தருடைய நாளின்போது பாலஸ்தீன தேசம் அழிக்கப்படும் என்பது இங்கு முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது (யோவே 1:17-20; யோவே 1:7-13).

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

2. எச்சரிப்பின் சத்தமிட அழைப்பு

யோவே 2:1 சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது.

"எக்காளம் ஊதுங்கள்" - இது யுத்தம் செய்வதற்கான அழைப்பாகும். (யோவே 2:15; யோவே 3:1-16).

3. அர்மகெதோனில் தேவனுடைய தெய்வீக சேனைகள் - (2தெச 1:7-10; வெளி 19:11-21; யூதா 14; சக 14:5)

யோவே 2:2 அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமானநாள்; விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை. இனித்தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டவாதுமில்லை.

யோவே 2:3 அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும், அவைகளுக்குப் பின்னாக ஜுவாலை எரிக்கும்; அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலவும், அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்தைப் போலவும் இருக்கும்; அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை.

யோவே 2:4 அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது; அவைகள் குதிரை வீரரைப்போல ஓடும்.

யோவே 2:5 அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல்போலவும், செத்தைகளை எரிக்கிற அக்கினி ஜுவாலையின் இரைச்சல்போலவும், யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல்போலவும், பர்வதங்களுடைய சிகரங்களின்மேல் குதிக்கும்.

யோவே 2:6 அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள்; எல்லா முகங்களும் கருகிப்போகும்.

யோவே 2:7 அவைகள் பராக்கிரம சாலிகளைப்போல ஓடும்; யுத்தவீரரைப் போல மதிலேறும்; வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும்.

யோவே 2:8 ஒன்றை ஒன்று நெருக்காது; ஒவ்வொன்றும் தன்தன் பாதையிலே செல்லும்; அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற்போகும்.

யோவே 2:9 அவைகள் பட்டணம் எங்கும்செல்லும்; மதிலின்மேல் ஓடும், வீடுகளின்மேல் ஏறும்; பலகணிவழியாய்த் திருடனைப்போல உள்ளே நுழையும்.

யோவே 2:10 அவைகளுக்கு முன்பாகப் பூமி அதிரும்; வானங்கள் அசையும்; சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்; நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்.

யோவே 2:11 கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவருடைய பாளயம் மகா பெரிது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?

"பலத்த ஜாதி" - இவை இயற்கைக்கு அப்பாற்பட்டவை

1. இப்படிப்பட்டவை இதற்கு முன் பூமியில் ஒரு காலத்திலும் உண்டானதில்லை. (யோவே 2:2).

2. இப்படிப்பட்டவை இதற்குப் பின் பூமியில் ஒரு காலத்திலும் உண்டாகப்போவதில்லை - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தானும், அவனுடைய தூதர்களும், பிசாசுகளும் இந்தப் பூமியைக் கைப்பற்றிக் கொள்வதற்காக இங்கு வருவார்கள். அவ்வேளையில் தேவன் தம்முடைய பரமசேனையைச் சாத்தானுக்கு விரோதமாக அனுப்புவார். (யோவே 2:2; ஏசா 24:22; வெளி 20:7-10).

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

3. அவைகளுக்கு முன்னாக அக்கினி பட்சிக்கும் (யோவே 2:3; எசே 38:17-21; 2தெச 1:7-10).

4. அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது (யோவே 2:4). இவற்றைப்போலவே பல வசனங்களில் தேவனுடைய சேனையில் விளக்கப் பட்டிருக்கிறது. (2இராஜா 2:11-12; 2இராஜா 6:16-19; சக 1:7-11; சக 6:1-8; வெளி 19:11,14,21).

5. அவைகள் ஆயுதங்களுக்குள் விழுந்தாலும் காயம்படாமற்போகும். (யோவே 2:8).

6. இவை மனுஷரிலிருந்து வேறுபட்டவை. அவைகள் பட்டணம் எங்கும்செல்லும்; மதிலின்மேல் ஓடும், வீடுகளின்மேல் ஏறும்; பலகணிவழியாய்த் திருடனைப் போல உள்ளே நுழையும். (யோவே 2:9).

7. இவை கர்த்தருடைய சேனை. கர்த்தர் இந்தச் சேனையை வழிநடத்துவார். (யோவே 2:11). கர்த்தருடைய சேனையில் பரிசுத்த தூதர்களும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் பரலோகத்திலிருந்து இறங்கி வருவார்கள். (சக 14:4-5; மத் 16:27; மத் 24:31; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

III. இஸ்ரவேலின் வருங்கால மீட்பு - (2:12-3:1)

1. மனந்திரும்புவதற்கு அழைப்பு - (சக 12:10)

யோவே 2:12 ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோவே 2:13 நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார்.

யோவே 2:14 ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போஜனபலிகளையும் பானபலி களையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார்.

யோவே 2:15 சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.

யோவே 2:16 ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக.

யோவே 2:17 கர்த்தரின் பணிவிடைக் காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும்; உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.

“இப்பொழுதே” - கர்த்தர் தம்முடைய சேனையோடு வந்து பூமியிலுள்ள ராஜ்யங்களை எடுத்துக் கொள்வார். ஆகையினால் இப்பொழுதே உபவாசத் தோடும் அழுகையோடும் புலம்பலோடும் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும். அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்ப டுகிறவருமாயிருக்கிறார். (யோவே 2:12-14). ஆகையினால் முதியோரும், பிள்ளைகளும், எல்லோரும் உபவாசித்து, கர்த்தருடைய இரக்கத்திற்காக ஜெபிக்க வேண்டுமென்று இங்கு கூறப்பட்டுள்ளது. (யோவே 2:15-17).

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

தீர்க்கதரிசனப் பிரிவு எண் - 3

"இப்பொழுதே.......கர்த்தர் சொல்லுகிறார்" (யோவே 2:12-32) இந்தத் தீர்க்கதரிசனப் பிரிவு இன்னும் நிறைவேறவில்லை. இஸ்ரவேல் தேசத்தார் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படும்போது இந்தத் தீர்க்கதரிசனப் பிரிவு நிறைவேறும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு, ஜனத்தைக் கடாட்சிப்பார். (யோவே 2:2-18).

2. கர்த்தர் மறுமொழி கொடுத்து, தமது ஜனத்தை நோக்கி: இதோ, உங்களுக்குத் தானியத்தையும் திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுப்பேன் என்று கூறுவார். (யோவே 2:19).

3. நீங்கள் அதினால் திருப்தியாவீர்கள்.

4. நான் உங்களை இனிப் புறஜாதிகளுக்குள்ளே நிந்தையாக வைக்கமாட்டேன்.

5. வடதிசைச்சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்குவேன். (யோவே 2:20).

6. அதின் முன்தண்டு கீழ்க்கடலுக்கும், அதின் பின்தண்டு மேற்கடலுக்கும் நேராக அதை வறட்சியும் பாழுமான தேசத்துக்குத் துரத்திவிடுவேன்.

7. அங்கே அதின் நாற்றம் எழும்பி, அதின் துர்க்கந்தம் வீசும் (யோவே 2:20; எசே 39:11-16).

8. தேசம் பயப்படாமல், மகிழ்ந்துகளிகூரும்; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். (யோவே 2:21).

9. வனாந்தரத்திலே மேய்ச்சல்கள் உண்டாகும் (யோவே 2:22).

10. விருட்சங்கள் காய்களைக் காய்க்கும்.

11. அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுப்பார். (யோவே 2:23).

12. உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார்.

13. களங்கள் தானியத்தினால் நிரம்பும் (யோவே 2:24).

14. ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.

15. நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனைகளாகிய வெட்டுக் கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். (யோவே 2:25).

16. நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிடுவீர்கள். (யோவே 2:26).

17. திருப்தியடைவீர்கள்.

18. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்.

19. என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப் பட்டுப்போவதில்லை. (யோவே 2:26-27).

20. நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்று அறிந்து கொள்வீர்கள். (யோவே 2:27).

21. நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்று அறிந்து கொள்வீர்கள்.

22. அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். (யோவே 2:28).

23. அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

24. உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்.

25. உங்கள் வாலிபர் தரிசனங்களைக் காண்பார்கள்.

2 அதிகாரம்

26. ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். (யோவே 2:29).

27. வானத்திலும் பூமியிலும் இரத்தம், அக்கினி, புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். (யோவே 2:30).

28. சூரியன் இருளாக மாறும். (யோவே 2:31).

29. சந்திரன் இரத்தமாக மாறும்.

30. கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் (யோவே 2:32).

31. கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் இரட்சிப்பு உண்டாகியிருக்கும்.

32. கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்.

"அவர் தீங்குக்கு மனஸ்தாபப் படுகிறவருமாயிருக்கிறார்" - இஸ்ரவேல் புத்திரர் தம்மிடத்தில் திரும்பி வருகிறபடியினால், கர்த்தர் தமது மனதை மாற்றிக் கொள்கிறார்.

"ஆசீர்வாதத்தைத் தந்தருளுவார்" - யூதாவின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வந்தபோது, இந்த ஆசீர்வாதம் அவர்களை விட்டு எடுக்கப்பட்டது. அவர்கள் மறுபடியும் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வரும்போது அவர்கள் இழந்துபோன ஆசீர்வாதம் அவர்களுக்கு மறுபடியும் கொடுக்கப்படும். (யோவே 2:14=யோவே 1:9).

2. அப்பொழுது - ஆறு அம்ச மீட்பு

யோவே 2:18 அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு, ஜனத்தைக் கடாட்சிப்பார்.

யோவே 2:19 கர்த்தர் மறுமொழி கொடுத்து, தமது ஜனத்தை நோக்கி: இதோ, நான் உங்களை இனிப் புறஜாதிகளுக்குள்ளே நிந்தையாக வைக்காமல், உங்களுக்குத் தானியத்தையும் திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுத்தேன், நீங்கள் அதினால் திருப்தியாவீர்கள்.

"அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு" - யோவே 2:12-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் இஸ்ரவேல் புத்திரர் முழுவதுமாக மனந் திரும்பும்போது கர்த்தர் தமது ஜனத்தைக் கடாட்சிப்பார். (யோவே 2:18-19) வடதிசைச் சேனையை அவர்களுக்குத் தூரமாக விலக்குவார். (யோவே 2:20).

3. அப்பொழுது - விரோதிகளின் அழிவு

யோவே 2:20 வடதிசைச்சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி, அதின் முன்தண்டு கீழ்க்கடலுக்கும், அதின் பின்தண்டு மேற்கடலுக்கும் நேராக அதை வறட்சியும் பாழுமான தேசத்துக்குத் துரத்திவிடுவேன்; அங்கே அதின் நாற்றம் எழும்பி, அதின் துர்க்கந்தம் வீசும்; அது பெரிய காரியங்களைச் செய்தது.

"கீழ்க்கடல்" (east sea) - இது சவக்கடலையோ அல்லது ஐப்பிராத்து நதியையும், பெர்சிய வளைகுடாவையுமோ குறிக்கலாம்.

"மேற்கடல்" (the utmost sea) - இது மத்தியதரைக்கடலாகும்.

"அங்கே அதின் நாற்றம் எழும்பி, அதின் துர்க்கந்தம் வீசும்" - (எசே 39:11-16)

4. அப்பொழுது - தேசம், ஜனம் ஆகியவற்றின் பதினான்கு அம்ச மீட்பு

யோவே 2:21 தேசமே, பயப்படாதே, மகிழ்ந்துகளிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

யோவே 2:22 வெளியின் மிருகங்களே, பயப்படாதேயுங்கள்; வனாந்தரத்திலே மேய்ச்சல்கள் உண்டாகும்; விருட்சங்கள் காய்களைக் காய்க்கும்; அத்திமரமும் திராட்சச்செடியும் பலனைத்தரும்.

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

யோவே 2:23 சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார்.

யோவே 2:24 களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.

யோவே 2:25 நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனைகளாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்.

யோவே 2:26 நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

யோவே 2:27 நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப் பட்டுப்போவதில்லை.

"வனாந்தரத்திலே மேய்ச்சல்கள் உண்டாகும்" - (யோவே 2:12)

"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனை" - இது யோவே 1:4 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வெட்டுக்கிளிகளின் வாதையாகும். இது தேசங்களின் சேனைகளுக்கு அடையாளம். இவை கர்த்தருடைய நாளில் பாலஸ்தீன தேசத்தைப் பாழாக்கிப்போடும்.

5. அதற்குப்பின்பு எல்லா ஜனங்களுடைய ஐந்து அம்ச ஆவிக்குரிய மீட்பு

யோவே 2:28 அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.

யோவே 2:29 ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்.

"அதற்குப் பின்பு" - இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு. (யோவே 2:18-27)

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும் சம்பவங்கள்

1. பெந்தெகொஸ்தே நாளிலும், அதன் பின்பு அன்றிலிருந்து இன்று வரையிலும். (அப் 2:1-28:31)
2. வருங்கால உபத்திரவக்காலத்தில். (யோவே 2:28-32; அப் 2:16-21)
3. ஆயிரம் வருஷ அரசாட்சியில். (ஏசா 32:15; ஏசா 44:3; எசே 36:26-27; எசே 39:29; சக 12:10)

பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவின் மீது நிறைவாக ஊற்றப்பட்டார். (ஏசா 11:1-2; ஏசா 42:1; ஏசா 61:1; மத் 3:16; மத் 12:18; யோவான் 3:34; அப் 10:38). இக்காலத்தில் விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரும் நிறைவைப் பெற்றுக் கொள்ள முடியும். (மத் 3:11; லூக்கா 24:29; யோவான் 7:37-39;அப் 1:4-8; அப் 2:33,38-39; கலா 3:13-14; 1கொரி 12; எபே 1:17-19; எபே 3:16-21).

"குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்" - ஆவிக்குரிய வரங்களிலும், வல்லமைகளிலும் ஸ்திரீகளுக்கும் பங்குள்ளது. அவர்கள் ஒதுக்கி வைக்கப்படவில்லை. (அப் 2:16-21; அப் 1:14; அப் 2:1-21; அப் 21:9; 2கொரி 11-14).

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

ஸ்திரீகளும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணலாம்

1. சுவிசேஷ புஸ்தகங்களில் நற்செய்தியை அறிவித்த பல ஸ்திரீகளைக் குறித்து நாம் வாசிக்கிறோம். (மத் 28:1-10; லூக்கா 24:9-11; யோவான் 4:28-30; யோவான் 20:16-18)

2. அப் 2:14-21; யோவே 2:28-31 ஆகிய வசனங்களில் தேவன் தமது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரியைப் பற்றிக் கூறியிருக்கும்போது ஸ்திரீகள்மீதும், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்படும் என்றும் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் என்றும் கூறியிருக்கிறார். "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்........ தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" (1கொரி 14:3,4) தீர்க்க தரிசனம் உரைப்பது சபையாருக்கும், பொது ஜனங்களுக்கும் பக்திவிருந்தி உண்டாகப் பேசுவதாகும். (1கொரி 12:1-31; 1கொரி 14:1-6, 12, 24-26,29-33).

3. அப் 21:8-9 ஆகிய வசனங்களில் பிலிப்புவின் குமாரத்திகள் தீர்க்கதரிசினிகள் என்பது தெளிவாகிறது. அவர்களுடைய தந்தையைப் போல இந்த நான்கு கன்னியாஸ்திரீகளும் சுவிசேஷகிகளாக இருந்தார்கள். யோவே 2:28-29 ஆகிய வசனங்களுக்கு இந்தக் காரியம் பரிபூரணமாக ஒத்திருக்கிறது. ஆதித் திருச்சபையில் யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (அப் 2:16) கடைசி நாட்களில் அப் 2:17-18 ஆகிய வசனங்களோடு இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

4. ரோமர் 16 ஆம் அதிகாரத்தில் திருச்சபைகளில் கர்த்தருக்காக ஊழியம் செய்த பல ஸ்திரீகளைக் குறித்து, நாம் வாசிக்கிறோம். அவர்களுடைய விவரம் வருமாறு: பெபேயாள் **(Phebe)** (ரோமர் 16:1-2), பிரிஸ்கில்லாள் **(Priscilla)** (ரோமர் 16:3-5), மரியாள் **(Mary)**, திரிபேனாள் **(Tryphena)**, திரிபோசாள் **(Tryphosa)**, பெர்சியாள் **(Persis)**, யூலியாள் **(Julia)** (ரோமர் 16:6-15)

5. பிலிப்பிலிருந்த திருச்சபையில் எயோதியாள் **(Euodias)**, சிந்திகேயாள் **(Syntyche)** ஆகியோர் தலைவராக ஊழியம் செய்தார்கள் என்று பிலி 4:2 ஆவது வசனத்தில் வாசிக்கிறோம்.

6. கொரிந்திய ஸ்திரீகள் சபையில் தீர்க்கதரிசனம் உரைத்து ஜெபம் பண்ணினார்கள். (1கொரி 11:4-5) ஸ்திரீகள் சபையில் பிரசங்கம் பண்ணுவதை 1கொரி 14:34-35 ஆகிய வசனங்கள் தடைபண்ணவில்லை. சபை ஆராதனைகளில் அவர்கள் தொந்தரவு பண்ணக்கூடாது. சபை ஆராதனை நடைபெறும்போது ஆராதனைக்கு அடுத்த காரியங்களில் பயபக்தியோடு இருப்பதற்குப் பதிலாக ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களோடு பேசிக் கொண்டிருக்கக் கூடாது. (1கொரி 14:35) ஸ்திரீகளுக்கு புருஷன்மேல் அதிகாரம் செலுத்த உத்தரவு இல்லை. ஆனாலும் ஸ்திரீகள் தங்களுடைய பொறுப்பையும், ஸ்தானத்தையும் உணர்ந்து ஊழியம் செய்யும்போது அவர்கள் பிரசங்கம் பண்ணுவதற்குத் தடையேதும் இல்லை. (1தீமோ 2:11-15) கொரிந்துவிலுள்ள சபையில் புருஷர்களும், ஸ்திரீகளும் ஜெபித்தார்கள். தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இந்த ஊழியங்களை எல்லாம் செய்தபோது அவர்கள் தங்களுக்கென்று ஒருசில ஒழுங்கு முறைகளை வகுத்துக் கொண்டார்கள். (1கொரி 14:24-32)

யோவேல் - தொகுப்புரை

2 அதிகாரம்

7. 1கொரி 12 ஆவது அதிகாரத்தில் சபையை மானிட சரீரத்திற்குப் பவுல் ஒப்பிடுகிறார். ஆவிக்குரிய ஒன்பது வரங்களைப் பற்றி பவுல் கூறுகிறார். அவற்றுள் தீர்க்கதரிசனம் உரைப்பதும் ஒரு வரமாகும். திருச்சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் அதாவது புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் தீர்க்கதரிசன வரம் அருளப்படும்.

8. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் ஸ்திரீகளை தீர்க்கதரிசினிகளாகப் பஸ்ன் படுத்தியிருக்கிறார். (யாத் 15:20; நியா 4:4; 2இராஜா 22:14; 2நாளா 34:22; நெகே 6:14; ஏசா 8:3; லூக்கா 1:39-56; லூக்கா 2:36). நியாயப் பிரமாண முறைமையின் பிரகாரம் ஸ்திரீகளும் பலிகளைச் செலுத்தலாம். பண்டிகைகளில் பங்குபெறலாம். பொருத்தனைகளை ஏறெடுக்கலாம். (உபா 12:11-18; லேவி 27).

6. கர்த்தருடைய நாளும் மேசியாவின் இரண்டாம் வருகைக்கு முந்திய அடையாளங்களும் (2:30-32)

யோவே 2:30 வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ் தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்.

யோவே 2:31 கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.

யோவே 2:32 அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர் களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்.

"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே" - வருங்கால உபத்திரவக்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் மாம்சமான யாவர்மேலும் ஊற்றப்படுவார், ஜனங்கள் இந்த உபத்திரவக்காலத்திலும் தொடர்ந்து இரட்சிக்கப் படுவார்கள் என்னும் சத்தியம் யோவே 2:30-32 ஆகிய வசனங்கள் மூலமாக உறுதியாகிறது. இந்த அடையாளங்கள் உபத்திரவக்காலத்திலும், கர்த்தருடைய பெரிதும், பயங்கரமுமான நாளுக்கு முன்பாகவும் நடைபெறும். (அப் 2:16-21).

"அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" - இது எக்காலத்திலும் மாறாத சத்தியம். கர்த்தரிடத்தில் இரக்கத்திற்காகக் கெஞ்சுகிறவர்கள் அதைப் பெற்றுக் கொள்வார்கள். யூதருக்காகிலும், புறஜாதியாருக்காகிலும் கர்த்தருடைய கிருபை எப்போதும் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. (யோவான் 3:16; ரோமர் 10:9-14; 1யோவான் 1:9).

"சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும்...... இரட்சிப்பு உண்டாயிருக்கும்." - இக்காலத்தில் யூதர்கள் ஒரு தேசமாக இரட்சிக்கப்படுவார்கள். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

யோவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

IV. அர்மகெதோன் யுத்தம்

1. யூதாவும் எருசலேமும் மீட்கப்பட்டன

யோவே 3:1 இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும்,

"யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பு" - எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தவர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். அதன் பின்பு யூதர்கள் இரண்டாம் முறையாகச் சிறையிருப்புக்குப் போகிறார்கள். (ஏசா 11:10-12) இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் முறையாகக் கூட்டிச் சேர்க்கப்படும் சம்பவம் இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிறைவு பெறும். (மத் 24:31). யூதா, எருசலேம், சீயோன் ஆகிய பெயர்களை யோவேல் பயன்படுத்துகிறார். யோவேல் யூதாவிற்குத் தீர்க்கதரிசனம் கூறுகிறார். எப்பிராயீம் தேசத்தின் பத்துக் கோத்திரத்தாரும் ஏற்கெனவே சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள். யோவேல் தீர்க்கதரிசனம் கூறுவதற்கு முன்பாக வடக்கு ராஜ்யம் அழிக்கப்பட்டுவிட்டது. யோவேல் தீர்க்கதரிசனம் கூறும்போது எப்பிராயீமின் பத்துக் கோத்திரத்தாரில் யாரைப் பற்றியும் குறிப்பிடவில்லை. யோவேலின் காலத்தில் வடக்கு இஸ்ரவேல் ராஜ்யம் முழுவதுமாக அழிந்துபோயிருக்கிறது.

மேசியா இஸ்ரவேல் புத்திரரை இரண்டாம் விசை கூட்டிச் சேர்க்கும் சம்பவம்

பாபிலோன் சிறையிருப்பின்போது தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போக வேண்டுமென்று விரும்பியவர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள். இது முதன் முறையாகக் கூட்டிச்சேர்க்கப்பட்ட சம்பவம். எஸ்றா, நெகேமியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய புஸ்தகங்களில் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச் சேர்த்த சம்பவம் விவரிக்கப் பட்டிருக்கிறது. திரளான ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். கிறிஸ்துவின் நாட்களில் இவர்கள் ஒரு பெரிய தேசமாக இருந்தார்கள்.

ரோமாபுரியார் யூதர்களை மேற் கொண்டார்கள். 600 வருஷங்களுக்கு முன்பு நேபுகாத்நேச்சாரின் காலத்தில் யூதருடைய பட்டணங்களும், தேவாலயமும் அழிக்கப்பட்டது போல ரோமாபுரியாரின் காலத்திலும் மறுபடியும் அழிக்கப்பட்டது. யூதர்கள் எல்லா தேசங்களிலும் சிதறிப்போனார்கள். (லூக்கா 21:20-24) அவர்கள்வீடு அவர்களுக்கு பாழாக்கி விடப்படும் என்று மத் 23:37-39 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மேசியா இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களைப் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் கூட்டிச் சேர்க்கப்பட்டது, கர்த்தர் அவர்களைக் கூட்டிச்சேர்த்த முதலாவது சம்பவம். அதன் பின்பு இஸ்ரவேல் புத்திரர் கிபி. 70 ஆம் வருஷத்தில் மறுபடியுமாக உலகம் முழுவதும் சிதறிப்போனார்கள். லூக்கா 21:20-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் நிறைவேறிற்று.

இதற்குப் பின்பு கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மறுபடியும் கூட்டிச்சேர்க்கவில்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களைக் கைவிடமாட்டார். இரண்டாம் விசை கர்த்தர் அவர்களைக் கூட்டிச்சேர்ப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். கர்த்தருடைய நாளில் அதாவது மேசியா பூமியை நித்தியமாக ஆளுகை செய்யும் நாளில் உலகமெங்கிலும் சிதறியிருக்கும் யூதர்களைக் கர்த்தர் இரண்டாம் விசையாகக் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 9:6-7; ஏசா 11:1-12:5; ஏசா 39:20-21).

தீர்க்கதரிசனப் பிரிவு எண் - 4

"நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும்,......" (யோவே 3:1-16) இந்தத் தீர்க்கதரிசனப் பிரிவு இன்னும் நிறைவேறவில்லை. இந்தச் சம்பவம் அர்மெகதோன் யுத்தத்திலும், கர்த்தருடைய நாளிலும் நிறைவேறும்.

யோவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் அந்நாட்களிலும் அக்காலத்திலும் திருப்புவேன். நான் சகல ஜாதியாரையும் கூட்டுவேன். (யோவே 3:1-2).

2. யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப் பண்ணுவேன். (யோவே 3:2).

3. அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புற ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டதினிமித்தமும் அவர்களோடு வழக்காடுவேன்.

4. நீங்கள் அவர்களை விற்றுப்போட்ட அவ்விடத்திலிருந்து நான் அவர்களை எழும்பிவரப்பண்ணுவேன். (யோவே 3:7).

5. நீங்கள் சரிக்கட்டினதை உங்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்வேன்.

6. உங்கள் குமாரரையும் உங்கள் குமாரத்திகளையும் யூதா புத்திரரின் கையிலே விற்பேன். (யோவே 3:8).

7. இவர்கள் அவர்களைத் தூரதேசத்தாராகிய சபேயரிடத்தில் விற்றுப்போடுவார்கள்.

8. யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்; பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக் கடவர்கள். (யோவே 3:9-12; எரே 6:4).

9. நான் அவர்களை யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே நியாயந்தீர்ப்பேன். (யோவே 3:12-14).

10. சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்,. (யோவே 3:15).

11. நட்சத்திரங்கள் ஒளிமழுங்கும்.

12. கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; (யோவே 3:16).

13. வானமும் பூமியும் அதிரும்.

14. கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்.

"அந்நாட்களிலும் அக்காலத்திலும்" - கர்த்தர் யூதர்களை மறுபடியும் எல்லா தேசங்களிலுமிருந்து திரும்பவும் அவர்களுடைய தேசத்திற்கு அழைத்துக் கொண்டுவருவார். பாலஸ்தீனத்தில் அவர்கள் புதிய தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். எருசலேம் அவர்களுடைய தலைநகரமாக இருக்கும். கர்த்தர் எல்லா தேசங்களையும் அவர்களுக்கு விரோதமாகக் கூட்டிச் சேர்ப்பார். (யோவே 3:1-2; சக 14:1-5; வெளி 16:13-16; வெளி 19:11-21).

2. சகல ஜாதியாரையும் கூட்டுதல் - (சக 14:1-3; வெளி 16:13-16; 19:19)

யோவே 3:2 நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புற ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டதினிமித்தமும்,

3. தேசங்கள்மீது நியாயத் தீர்ப்பிற்கான காரணங்கள்

யோவே 3:3 அவர்கள் என் ஜனத்தின் பேரில் சீட்டுப்போட்டு, ஆண் குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம்பண்ணும்படி, பெண் குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்ததினிமித்தமும், அங்கே அவர்களோடு வழக்காடுவேன்.

யோவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

யோவே 3:4 தீருவே, சீதோனே, பெலிஸ்தியாவின் சகல எல்லைகளே, உங்களுக்கும் எனக்கும் என்ன? இப்படி எனக்குச் சரிக்கட்டுகிறீர்கள்? இப்படி எனக்குச் சரிக்கட்டுவீர்களாகில், நான் தாமதமின்றி அதிசீக்கிரமாய் நீங்கள் சரிக்கட்டுகிறதை உங்கள் தலையின்மேல் திரும்பும்படிசெய்வேன்.

யோவே 3:5 நீங்கள் என் வெள்ளியையும் என் பொன்னையும் எடுத்து, இன்பமும் உச்சிதமுமான என் பொருள்களை உங்கள் கோவில்களிலே கொண்டுபோய்,

யோவே 3:6 யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும் அவர்களுடைய எல்லைகளுக்குத் தூரமாக்கும்படிக்கு கிரேக்கரிடத்தில் விற்றுப்போட்டீர்கள்.

யோவே 3:7 இதோ, நீங்கள் அவர்களை விற்றுப்போட்ட அவ்விடத்திலிருந்து நான் அவர்களை எழும்பிவரப்பண்ணி, நீங்கள் சரிக்கட்டினதை உங்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்து,

யோவே 3:8 உங்கள் குமாரரையும் உங்கள் குமாரத்திகளையும் யூதா புத்திரரின் கையிலே விற்பேன்; இவர்கள் அவர்களைத் தூரதேசத்தாராகிய சபேயரிடத்தில் விற்றுப்போடுவார்கள்; கர்த்தர் இதைச் சொன்னார்.

புறஜாதியார்மீது நியாயத்தீர்ப்பிற்குக் காரணம்

1. அவர்கள் என் ஜனத்தின்பேரில் சீட்டுப் போட்டார்கள். (யோவே 3:3).
2. ஆண்குழந்தைகளை வேசிப் பணையமாகக் கொடுத்தார்கள்.
3. பெண் குழந்தைகளைத் திராட்ச ரசத்துக்குக் கிரயமாகக் கொடுத்தார்கள்.
4. மதுபானம் பண்ணி ஜீவித்தார்கள்.
5. என் வெள்ளியையும் என் பொன்னையும் எடுத்துக் கொண்டார்கள். (யோவே 3:5).
6. இன்பமும் உச்சிதமுமான என் பொருள்களை அவர்கள் கோவில்களிலே கொண்டுபோய் வைத்தார்கள்.
7. யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும் கிரேக்கரிடத்தில் விற்றுப் போட்டார்கள். (யோவே 3:6).

4. ஜனங்களைக் கூட்டுமாறும் யுத்தம் பண்ணுமாறும் கூறுவதன் பத்து அம்சங்கள்

யோவே 3:9 இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்; பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள்.

யோவே 3:10 உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக.

யோவே 3:11 சகல ஜாதிகளே, நீங்கள் சுற்றிலுமிருந்து ஏகமாய் வந்து கூடுங்கள்; கர்த்தாவே, நீரும் அங்கே உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப் பண்ணுவீராக.

யோவே 3:12 ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக; சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன்.

"இதைப் புறஜாதிகளுக்குள்ளே கூறுங்கள்; யுத்தத்துக்கு ஆயத்தம் பண்ணுங்கள்;" - யோவே 3:2; சக 14:2; வெளி 19:19 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யுத்தத்திற்கு ஆயத்தமாகும் சம்பவம் யோவே 3:9-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன்" - இது அர்மெகதோன் யுத்தத்தையும், தேசங்களுடைய நியாயத் தீர்ப்பையும் குறிப்பிடுகிறது. (மத் 25:31-46).

யோவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

5. அந்திக்கிறிஸ்துவின் சேனையினுடைய பத்து அம்ச அழிவு - (எசே 38-39; சக 14; வெளி 14:14-20; 19:11-21; ஏசா 34)

யோவே 3:13 பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள்; ஆலை நிரம்பியிருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது; அவர்களுடைய பாதகம் பெரியது.

யோவே 3:14 நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே ஜனங்கள் திரள்திரளாய் இருக்கிறார்கள்; நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கிலே கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது.

யோவே 3:15 சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் ஒளிமழுங்கும்.

யோவே 3:16 கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்.

"பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள்" - யோவே 3:13-16 ஆகிய வசனங்களில் அர்மெகதோன் யுத்தத்தைப் பற்றிய குறிப்பும், அந்திக்கிறிஸ்துவின் தேசங்களுடைய சேனைகளின் அழிவைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. இவை ஏசா 63:1-5; எசே 38-39; சக 14; வெளி 19:11-21 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும்.

"அரிவாள்" - (வெளி 14:14-20; வெளி 19:15)

"சூரியனும் சந்திரனும் இருண்டுபோகும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இந்தச் சம்பவம் நடைபெறும். (யோவே 2:30-32; மத் 24:29-31).

"கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்" - அந்திக்கிறிஸ்துவின் சேனைக்கு எதிராகக் கர்த்தர் தம்முடைய பரலோகத்தின் சேனையை வழிநடத்திச் செல்வார். (யோவே 2:11; ஏசா 63:1-5; சக 14:1-5; மத் 24:29-31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).

V. அர்மகெதோன் யுத்தத்திற்குப் பின்பு இஸ்ரவேலின் வருங்கால மீட்பு

1. கர்த்தர் சீயோனில் ஆளுகை செய்கிறார்

யோவே 3:17 என் பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே வாசமாயிருக்கிற நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்; அப்பொழுது எருசலேம் பரிசுத்தமாயிருக்கும்; அந்நியர் இனி அதைக்கடந்துபோவதில்லை.

தீர்க்கதரிசனப் பிரிவு எண் - 5

"நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அப்பொழுது அறிந்துகொள்வீர்கள்......" (யோவே 3:17-21) இந்தத் தீர்க்கதரிசனப் பிரிவு இன்னும் நிறைவேறவில்லை. இந்தச் சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போதும் கர்த்தருடைய நாளின்போதும் நிறைவேறும். ஆயிரம் வருஷ அரசாட்சி முழுவதிலும் இந்தச் சம்பவம் நடைபெறும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. என் பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே வாசமாயிருக்கிற நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள் (யோவே 3:17; எசே 48:30-35).

2. அப்பொழுது எருசலேம் பரிசுத்தமாயிருக்கும் (யோவே 3:17; சக 14:16-21).

3. அந்நியர் இனி அதைக்கடந்து போவதில்லை. (யோவே 3:17).

4. அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும் (யோவே 3:18)

5. மலைகள் பாலாய் ஓடும்.

யோவேல் - தொகுப்புரை

3 அதிகாரம்

6. யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும்.

7. ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும். (யோவே 3:18; எசே 47:1-12; சக 14:8).

8. எகிப்து பாழாய்ப்போகும் (யோவே 3:19).

9. ஏதோம் பாழான வனாந்தரமாகும்.

10. யூதாவோ சதாகாலமாகவும், எருசலேம் தலைமுறை தலைமுறையாகவும் குடியேற்றப் பட்டிருக்கும். (யோவே 3:20).

11. நான் தண்டியாமல் விட்டிருந்த அவர்களுடைய இரத்தப்பழியைத் தண்டிப்பேன். (யோவே 3:21).

12. கர்த்தர் சீயோனிலே வாசமாயிருப்பார்.

2. இஸ்ரவேலின் பௌதீக ஆசீர்வாதங்கள்

யோவே 3:18 அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும், ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும்.

"ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு" - எசேக்கியேல் எசே 47:1-12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மகா நதியின் ஆதாரத்தை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது.

3. இஸ்ரவேல் தன் விரோதிகள்மீது பழிதீர்த்தது

யோவே 3:19 யூதா புத்திரரின் தேசத்திலே குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தி, அவர்களுக்குச் செய்த கொடுமையினிமித்தம் எகிப்து பாழாய்ப்போகும்; ஏதோம் பாழான வனாந்தரமாகும்.

4. நித்திய ஜனமான யூதா

யோவே 3:20 ஆனால் யூதாவோ சதாகாலமாகவும், எருசலேம் தலைமுறை தலைமுறையாகவும் குடியேற்றப் பட்டிருக்கும்.

யோவே 3:21 நான் தண்டியாமல் விட்டிருந்த அவர்களுடைய இரத்தப் பழியைத் தண்டியாமல் விடேன்; கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறார்.

"யூதாவோ சதாகாலமாகவும்,......... குடியேற்றப் பட்டிருக்கும்" - யூதாவில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் இடம் பெற்றிருப்பார்கள். (எசே 37; எசே 48:1-29) எருசலேம் அவர்களுடைய நித்திய நகரமாக இருக்கும். (எசே 48:30-35).

"கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறார்" - எசேக்கியேலைப் போலவே யோவேலின் புஸ்தகமும் முடிவுபெறுகிறது. மனுஷர் மத்தியிலே கர்த்தர் பூமியில் பிரத்தியட்சமாக ஜீவிப்பார் என்னும் சத்தியத்தை எசேக்கியேலும், யோவேலும் வலியுறுத்திக் கூறுகிறார்கள். (எசே 48:30-35).